செ.வெ.எண்: 50 நாள்:27.01.2018

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் புளியங்குடி நகராட்சி பகுதியில் 4.89 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தொடங்கி வைத்தார்.

-----

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சி மற்றும் புளியங்குடி நகராட்சி பகுதிகளில் திட்டப் பணிகள் தொடக்க நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.01.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு சங்கரன்கோவில் நகராட்சியில் ரூ.3 கோடி மதிப்பிலும், புளியங்குடி நகராட்சியில் ரூ.1.89 கோடி மதிப்பிலும் மொத்தம் ரூ.4.89 கோடி மதிப்பிலான திட்ட பணிகளை தொடங்கி வைத்தார்.

சங்கரன்கோவில் நகராட்சி இரயில்வே பீடர் சாலை மற்றும் குறுக்குத்தெரு தார் சாலை அமைத்தல், நகராட்சி அலுவலகம் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகள் ரூ.1.30 கோடி மதிப்பிட்டிலும், திருவள்ளுவர் சாலை, வி.ஐ.பி நகர், இளவன்குளம் சாலை, கழுகுமலை சாலை, மேல ரத வீதி பகுதியில் தார் சாலை அமைத்தல் மற்றும் காயிதேமில்லத் தெருவில் பேவர் பிளாக் சாலை ஆகிய பணிகள் ரூ1.70 கோடி மதிப்பீட்டிலும் மொத்தமாக ரூ.3 கோடி மதிப்பிலான பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து புளியங்குடி நகராட்சி பகுதிகளில் ரூ.17 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட சிந்தாமணி பேருந்து நிலையத்தையும் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கோட்டமலையாறு மற்றும் வாலைமலையாறு திறந்தவெளி கிணறு மூலம் நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தினையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். தொடர்ந்து புளியங்குடி நகராட்சியில் ரூ.40 லட்சம் மதிப்பில் நகராட்சி காந்தி நினைவு நாளங்காடி புதிய கட்டிட கட்டுமான பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அடிகல் நாட்டி பணிகள் துவக்கி வைத்தார். மேலும் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட நகராட்சி அலுவலகத்தினையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மனோகரன், தென்காசி வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், டான்பேட் துணை தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜீ, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர் திரு.ஆறுமுகம், சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் திரு.தாணுமூர்த்தி, புளியங்குடி நகராட்சி ஆணையாளர் திரு.பவுண்ராஜ், நகராட்சி பணி மேற்பார்வையாளர் திரு.சாகுல் அமீது, நகராட்சி பொறியாளர் திருமதி.புஸ்பலதா, சங்கரன்கோவில் வட்டாட்சியர் திரு.மாரியப்பன், முக்கிய பிரமுகர்கள் திரு.வேல்முருகன், திரு.வாசுதேவன், திரு.சண்முகையா, திரு.ஆர்.ஆர்.மூர்த்தி பாண்டியன், திருமதி.தேவகி குழந்தைவேல், திரு.பரமேஷ்வரபாண்டியன் மற்றும் நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.